## தூத்துக்குடி முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.32,554 கோடியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

# தென் மாவட்ட தொழிற்புரட்சிக்கு வித்திட்ட முதலீடுகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது!

தூத்துக்குடி, ஆக. 6 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (4.8.2025) தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 32,554 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 49,845 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கிடும் வகையில் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 1,230 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 4 முடிவுற்ற திட்டங்களின் வணிக உற்பத்தியினை தொடங்கி வைத்து, மூன்று நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட வர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (4.8.2025) தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 32,554 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 49,845 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கிடும் வகையில் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்ட நிறுவனத்தின் நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன், அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், திருமதி பி. கீதாஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், டாக்டர் அதுல் ஆனந்த், வி. அருண்ராய், மருத்துவர் தாரேஸ் அகமது, இல.நிர்மல்ராஜ், மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, RGE நிறுவனத்தின் தலைவர் டெய் வெய் லின், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்.

### தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் 32,288.70 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில் 48,649 நபர்களுக்கு உறுதி யளிக்கப்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 22 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட சில முக்கியமான திட்டங்கள் பற்றிய விவரங்கள்:

RGE நிறுவனம் சிங்கப்பூரைச் சேர்ந்த செயற்கை இழை (Man Made Fibre) உற்பத்தியில், உலகளவில் முன்னணி நிறுவனமான RGE நிறுவனம், இந்தியா விலேயே, முதன் முறையாக, தூத்துக்குடியில் உற்பத்தி ஆலை அமைத்திட முன்வந்துள்ளது. இத்திட்டத்தில், 4,953 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 1,065 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

Kaynes Circuits India Private Limited நிறுவனம் தமிழ்நாட்டில் 4,995 கோடி ரூபாய் முதலீட்டில், 74 Layer PCB, HDI PCB, Flexible PCB உற்பத்தி, உயர்செயல்திறன் laminates, Camera Module அசெம்பிளி, wire harness assembly போன்ற மேம்பட்ட மின்னணுவியல் உதிரிபாகங்கள் உற்பத்தி திட்டத்தினை அமைக்கவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தூத்துக்குடி மற்றும் பிற மாவட்டங்களில் 4,700 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். மேலும், தூத்துக்குடி ஒரு எலெக்ட்ரானிக்ஸ் உற்பத்தி மையமாக (Electronics Cluster) வளர்ச்சி பெறும்.

Yeemak Pvt Ltd & Jeanuvs நிறுவனங்கள் இணைந்து தூத்துக்குடி மற்றும் பிற மாவட்டங்களில், multilayer PCB, artillery shells, radar systems மற்றும் நுகர்வோர் மின்னணு உதிரிபாகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யவுள்ளன. இத்திட்டத்தில் உறுதியளிக்கப்பட்ட முதலீடு 3,400 கோடி ரூபாய் மற்றும் உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு 7,600 நபர்கள் ஆகும்.

சென்னை ராதா இன்ஜினியரிங் வர்க்ஸ் நிறுவனம் இந்திய இரயில்வேக்கு இரயில் பெட்டி உற்பத்திக்கான உதிரிபாகங்கள் மேற்கொள்ளும் முன்னணி நிறுவன மாகும். இந்நிறுவனம், தூத்துக்குடியில், கப்பல் கட்டுமானத்திற்கான உதிரிபாகங்கள் தயாரிக்க 1500 கோடி ரூபாய் உறுதிசெய்யப்பட்ட முதலீட்டில், ஒரு உற்பத்தி ஆலையை நிறுவன முன்வந்துள்ளது.

சக்தி குழுமம் - வெடிபொருள், உந்துசக்தி உற்பத்தி மற்றும் பரிசோதனை ஆலையை சக்தி குழுமம் தூத்துக்குடியில் அமைக்க முன்வந்துள்ளது. 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். இவ்வாலை நிறுவப்படுவதன் மூலம், தூத்துக்குடி மாவட்டத்தில் பாதுகாப்புத் துறை சார்ந்த உற்பத்தி மேலும் வலுப்படும்.

Ethereal Exploration Guild - விண்வெளி தொழில்நுட்ப ஸ்டார்ட்அப் நிறுவனம், தூத்துக்குடியில் நடுத்தர வகை ராக்கெட் இன்ஜின்கள் உற்பத்தி மற்றும் சோதனை செய்வதற்கான புதிய ஆலையை அமைக்க உள்ளது. இதன் மூலம், விண்வெளித் துறையில் தூத்துக்குடி ஒரு முக்கிய மையமாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Hwaseung Enterprise - தென் கொரியாவைச் சேர்ந்த தோல் அல்லாத காலணி உற்பத்தியில் முன்னணி நிறுவனமான Hwaseung நிறுவனம், 1720 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 20,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் ஒரு உற்பத்தி நிறுவனம் அமைக்க முன்வந்துள்ளது.

Mobius Energy நிறுவனம் 1000 கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட முதலீட்டில், தேனி மாவட்டத்தில் சோலார் செல்கள் மற்றும் மாட்யூல்கள் உற்பத்தி ஆலை நிறுவிட முன்வந்துள்ளது.

### குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், 265.15 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1196 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 19 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரங்கள்:

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | இடம் | உற்பத்தித் துறை |
|---|---|---|---|
| 1 | Seaora Marine Pvt Ltd | தூத்துக்குடி | உணவு பதப்படுத்துதல் |
| 2 | Shrimathi Salt Pvt Ltd | தூத்துக்குடி | உணவு பதப்படுத்துதல் |
| 3 | Ganesh Rajah Organization Pvt Ltd | தூத்துக்குடி | உணவு பதப்படுத்துதல் |
| 4 | Kadalaiyur Match Company | தூத்துக்குடி | பொது உற்பத்தி |
| 5 | Surya Match Industries | தூத்துக்குடி | பொது உற்பத்தி |
| 6 | Antara Residency | தூத்துக்குடி | விருந்தோம்பல் |
| 7 | Everest Glass and Plywood Factory | இராமநாதபுரம் | பொது உற்பத்தி |
| 8 | La Palmera Resort | இராமநாதபுரம் | விருந்தோம்பல் |
| 9 | VVM PUF Industries | திருநெல்வேலி | பொது உற்பத்தி |
| 10 | Deborah Technologies LLP | திருநெல்வேலி | இரசாயனம் |
| 11 | Muhil Modern Rice Mill | திருநெல்வேலி | உணவு பதப்படுத்துதல் |
| 12 | Sattur Venkateshwara Paper Mills Pvt Ltd | திண்டுக்கல் | பொது உற்பத்தி |
| 13 | Shree Vinayaga Agro Manufacturing & Processing Industry | திண்டுக்கல் | உணவு பதப்படுத்துதல் |
| 14 | Horizon Beverages | திண்டுக்கல் | உணவு பதப்படுத்துதல் |
| 15 | Inbasekar Fly Ash Bricks | மதுரை | பொது உற்பத்தி |
| 16 | Rajarajeswari Krafts Private Limited | விருதுநகர் | பொது உற்பத்தி |
| 17 | MTC Polymers and Packaging | விருதுநகர் | பொது உற்பத்தி |
| 18 | Aathi Fishnet | கன்னியாகுமரி | பொது உற்பத்தி |
| 19 | Moringa Market Linkage Initiative | பல மாவட்டங்களில் | உணவு பதப்படுத்துதல் |

### திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டங்களின் விவரங்கள்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 1,230 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 4 திட்டங்களின் வணிக உற்பத்தியினை தொடங்கி வைத்தார். அதன் விவரங்கள்:

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | இடம் | உற்பத்திப் பொருள் |
|---|---|---|---|
| 1 | Pro1health | தூத்துக்குடி | தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில் நுட்ப சேவைகள் |
| 2 | Nanda Devi Bio Energy | திருநெல்வேலி | இரசாயனம் |
| 3 | Britannia | திருநெல்வேலி | உணவு பதப்படுத்துதல் |
| 4 | YEEMAK | காஞ்சிபுரம் | மின்னணுவியல் |

### பணி நியமன ஆணைகள் வழங்கல்

TATA Power Solar, Infinx மற்றும் Pinnacle Infotech ஆகிய மூன்று தொழில் நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன் தினம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சமூகநலம் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. மார்க்கண்டேயன், எஸ்.அமிர்தராஜ், சி.சண் முகய்யா, மருத்துவர் நா. எழிலன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் டாக்டர் அதுல் ஆனந்த், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, தொழில் வணிக ஆணையர் இல. நிர்மல்ராஜ், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் டாக்டர் கே.அழகுசுந்தரம், RGE நிறுவனத்தின் தலைவர் டெய் வெய் லின், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் செஞ்சி ஊராட்சியில் சிற்றம்பாக்கம் ராமன் கோயில் விடையூர் செஞ்சி ஊராட்சிகளுக்கான 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களிடத்தில் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் க.திராவிட பக்தன், கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.அரிகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் மோ.ரமேஷ், எஸ்.மகாலிங்கம், மாநில தொண்டரணி பயிற்சியாளர் மாஸ்டர் இ. குருதாஸ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சரஸ்வதி சந்திரசேகர், ஒன்றிய கழக நிர்வாகிகள் கு.செங்குட்டுவன், கொப்பூர் டி. திலீப் குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் மந்தவெளியான், டி.ராஜி, என்.பிரசன்ன குமார், பிரகாஷ் ஞான ஒளி, ஆர்.வாசு, எம்.சங்கர், ஏ.பெருமாள், பகவதிராஜா, மகேஷ் குமார், பாலு, ஜெயபால் சுந்தர்ராஜன், பற்குணராஜ், செஞ்சி ஸ்ரீதர், ரஞ்சன், மதி, தாமோதரன், ஜார்ஜ் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### தேசிய தொழில்நுட்ப டெக்ஸ்டைல்ஸ் மிஷன் (NTTM) உள்நாட்டு உற்பத்தியின் கீழ்

## திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளை சார்ந்து ஏதேனும் முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளதா?

### மக்களவையில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக.6-

தேசிய தொழில்நுட்ப டெக்ஸ்டைல்ஸ் மிஷன் - (NTTM) - உள்நாட்டு உற்பத்தியின் கீழ் இன் *Indigenous Manufacturing* கீழ், திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளை சார்ந்து ஏதேனும் முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளதா?

பெறப்பட்டிருந்தால், அவை தொடர்பான விவரங்கள் மற்றும் தற்போதைய நிலை என்ன?நெசவுத் தொழிலில் பிரபலமான திருப்பூர், விளையாட்டு தொழில்நுட்ப ஜவுளி (*Sports Tech Textiles*) துறைக்கு தேவையான தொழில் சூழலைக் கொண்டுள்ளது என்பதை அமைச்சகம் அறியுமா?

இதனை முன்னேற்ற NTTM-ன் கீழ் கொத்து (*Cluster*) திட்டங்கள் அல்லது கூட்டுறவுத் திட்டங்கள் எதாவது எடுக்கப் பட்டுள்ளதா?

இந்த பகுதியில் உள்ள தற்போதைய திறனை அடிப்படையாகக் கொண்டு NTTM-ன் கீழ் பல்வகைப்படுத்தல் (*Diversification*) திட்டங்கள் பரிசீலிக்கப் பட்டுள்ளனவா?

ஈரோடு பகுதியில், *agro-tech* மற்றும் *pack-tech* உற்பத்தியை ஊக்குவிக்க அமைச்சகம் திட்டமிட்டுள்ளதா? திட்டமிட்டிருந்தால், அதன் விவரங்கள் என்ன என்று மக்களவையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய அரசின் பதில் வருமாறு :-

இந்திய அரசு, திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளில் இருந்து வந்த இரண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவை *GREAT Scheme* மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**திருப்பூரில் ஒப்புதல் பெற்ற திட்டம்:**

*"Design and Development of pilot scale innovative Zero Solid Discharge (ZSD) system for resource recovery from final residue in textile and industrial ZLD plants (circularity & sustainability)"*

**ஈரோட்டில் ஒப்புதல் பெற்ற திட்டம்:**

*"Natural Anti-Microbial Coated textiles for Hospital wear"* தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பன்னிரண்டு (12) *Research Projects* இரண்டு (2) *Start-up Projects* ஒப்புதல் பெற்றுள்ளன. மேலும் தமிழ்நாட்டிலுள்ள 12 கல்வி நிறுவனங்களுக்கு, தங்களது பாடத்திட்டத்தில் *Technical Textiles* தொடர்பான பாடங்களை சேர்க்க NTTM மூலம் ஆதரவு வழங்கப் பட்டுள்ளது.



திருப்பூர், நாடளவில் முக்கியமான *Textile Cluster* என அங்கீகரிக்கப் பட்டுள்ளது. NTTM என்பது இந்தியா முழுவதும் தொழில்நுட்ப நூல்களின் 12 பகுதிகளையும் ஊக்குவிக்கும் *Pan India Mission* ஆகும். இதில் ஈரோடு மற்றும் திருப்பூர் போன்ற *Clusters*-க்கான வளர்ச்சியும் அடங்கியுள்ளது.

ஜவுளித்துறை அமைச்சகம் இந்தியாவின் முக்கிய தொழில்நுட்ப நூல் துறைகளில் 8 *Centers of Excellence*-ஐ நிறுவியுள்ளது. அத்தகைய ஒரு மையமான *South India Textile Research Association (SITRA)*, கோயம்புத்தூரில் அமைந்துள்ளது. இது ஈரோடு மற்றும் திருப்பூர் பகுதிகளுக்கு சேவையளிப்பதோடு, இந்தியா முழுவதுமுள்ள தொழில்துறைக்கும் சேவைகளை வழங்குகிறது.

NTTM மார்ச் 2020-இல் தொடங்கியதிலிருந்து, இந்தியா முழுவதும் மொத்தம் 32 விழிப்புணர்வு மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன, இதில் 2 நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ளது.

*National Technical Textiles Mission (NTTM)* இன் கீழ், தொழில்நுட்ப நூல்களின் 12 வகைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதில் *Productivity* மற்றும் *Efficiency*-ஐ மேம்படுத்த *Agro-Tech* மற்றும் *Pack-Tech* ஆகியவை முக்கியமான பகுதிகள் ஆகும். *Agrotech* பகுதியில் 14 *Research Projects* மற்றும் *Packtech* பகுதியில் 1 *Research Project* என மொத்தமாக 15 திட்டங்கள் NTTM-இன் கீழ் ஒப்புதல் பெற்றுள்ளன. இதில் ஒன்று தமிழ்நாட்டில் *Agrotech* பகுதியில் ஒப்புதல் பெற்றுள்ளது. மேலும், *Production Linked Incentive (PLI) Scheme for Textiles*-ன் கீழ் *Agrotech* பகுதியில் மொத்தமாக 6 *Manufacturing Units*-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, *SASMIRA, Mumbai*-யில் அமைந்துள்ள *Center of Excellence*, இந்தியா முழுவதும் உள்ள தொழில்துறைக்கு *Agrotech* நூல்கள் தொடர்பான சேவையை வழங்குகிறது. NTTM என்பது இந்தியா முழுவதும் செயல்படும் ஒரு திட்டம் ஆகும். இது, ஈரோடு உட்பட *Technical Textiles* தொடர்பான அனைத்து வகைகளுக்கும் - உதாரணமாக *Agrotech* மற்றும் *Packtech* - கூட்டு ஆய்வு (*Research*), புதிய கண்டுபிடிப்பு (*Innovation*), சந்தை ஊக்குவிப்பு (*Market Promotion*), திறன் மேம்பாடு (*Skill Development*), மற்றும் கல்வி (*Education*) ஆகியவை பற்றிய முழுமையான ஆதரவுகளை வழங்குகிறது என்று ஒன்றிய அரசு பதிலில் தெரிவித்துள்ளது.